# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை
**********************

## இந்தியாவில் பயின்றவர்களின் முதலாவது ஓவியக் கண்காட்சி- சித்ரலேகா கொழும்பில் ஆரம்பம்

இந்தியாவில் பயின்ற இலங்கை கலைஞர்களின் முதலாவது ஓவியக் கண்காட்சியான “சித்ரலேகா”, புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சின் செயலாளர் சோமரத்னே விதானபத்திரண அவர்கள் சகிதம் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்களால் இன்று காலை கொழும்பில் உள்ள JDA பெரேரா கலா பவனத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட்து.

2. இக்கண்காட்சியில் இலங்கையின் தலைசிறந்த ஓவியர்களாக இருந்து இந்தியாவின் ஓவியப் பாரம்பரியத்துடன் மிகவும் நெருக்கமான உறவைப் பேணிய ஆனந்த சமரக்கோன், சோமபந்து வித்யாபதி, சங்கைக்குரிய எல்.டி.பி.மஞ்சுசிறி தேரர், ஜோர்ஜ் கேய்ற், ஹரி பீரிஸ், உபசேன குணவர்த்தன மற்றும் பேர்னாட் லொக்குகே ஆகிய ஏழு விற்பன்னரிகளினதும் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள படைப்புகளில் 5 தனித்துவமிக்க படைப்புகள் கலாசாரத் திணைக்களத்தின் தேசிய கலா பவனத்தால் வழங்கப்பட்டுள்ள அதேவேளை ஏனையவை சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்திலிருந்தும் ஓவியர்களது குடும்பங்கிளிடமிருந்தும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3. இந்தியாவில் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் பயின்ற ஓவியர்களில் தலைசிறந்த ஓவியர்களான வின்னி ஹெட்டிகொட, சரத் குணசிறி பெரேரா, எஸ்.சிவரூபன், சுசிரிபால மலிம்படா, ரம்யாவர்தன பொடிநிலமே, ரினுஜா சிவசங்கர், மற்றும் டாக்டர் மனோரஞ்சன ஹேரத் உள்ளிட்ட 26 சமகால ஓவியர்கள் இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் இதில் கலந்துகொண்டனர். இவர்களில் பெருமளவானவர்கள் கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையினால் வழங்கப்படும் புலமைப் பரிசிலினைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் ஜகத் ரவீந்திர மற்றும் திரு.அசங்க ஜயசிங்க ஆகியோரால் தொகுக்கப்பட்ட இக்கண்காட்சியில் கிட்டத்தட்ட 150 ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

4. கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த கண்காட்சி, கலாசார உறவுகளுக்கான

இந்திய பேரவையினால் அனுஸ்டிக்கப்படும் இந்தியாவில் பயின்ற மாணவர்கள் ஆண்டினைக் கொண்டாடும் வகையிலும், இந்தியா இலங்கை இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந்துள்ளமை ஆகிய வரலாற்று முக்கியத்துவமிக்க தருணங்களையும் குறித்து நிற்கின்றது.

5. இந்த கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் ஓவியர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் ஏனைய பேராளர்கள் கலந்து கொண்டிருந்தனர். சார்க் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் ரேனுகா எக்கநாயக்கா, துணைவேந்தர் பேராசிரியர் (டாக்டர்) ரோஹன பி மஹலியனாராச்சி ஆகியோரும் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். இந்த கண்காட்சியினை 2023 ஒக்டோபர் 12ஆம் திகதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 06.00 மணிவரை பார்வையிட முடியும்.

**************

கொழும்பு
10 ஒக்டோபர் 2023